ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 11.1 – குன்றமொன்றெடுத்து

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 11.1 – குன்றமொன்றெடுத்து

‡ குன்றம் ஒன்றெடுத்தேந்தி ⋆
மா மழை அன்று காத்த அம்மான் ⋆
அரக்கரை வென்ற வில்லியார் ⋆
வீரமே கொலோ ⋆
தென்றல் வந்து ⋆
தீ வீசும் என் செய்கேன் ‖ **11.1.1** ‖

காரும் வார் பனிக் ⋆
கடலும் அன்னவன் ⋆
தாரும் மார்வமும் ⋆
கண்ட தண்டமோ ⋆
சோரும் மா முகில் ⋆
துளியின் ஊடு வந்து ⋆
ஈர வாடை தான் ⋆
ஈரும் என்னையே ‖ **11.1.2** ‖

சங்கும் மாமையும் ⋆
தளரும் மேனி மேல் ⋆
திங்கள் வெங்கதிர் ⋆
சீறும் என் செய்கேன் ⋆
பொங்கு வெண் திரைப் ⋆
புணரி வண்ணனார் ⋆

கொங்கலர்ந்த தார் ⋆
கூவும் என்னையே ‖ **11.1.3** ‖

அங்கோர் ஆய்க் குலத்துள் ⋆
வளர்ந்து சென்று ⋆
அங்கோர் ⋆
தாய் உருவாகி வந்தவள் ⋆
கொங்கை நஞ்சுண்ட ⋆
கோயின்மை கொலோ ⋆
திங்கள் வெங்கதிர் ⋆
சீறுகின்றதே ‖ **11.1.4** ‖

அங்கோர் ஆள் அரி ஆய் ⋆
அவுணனை ⋆
பங்கமா ⋆
இரு கூறு செய்தவன் ⋆
மங்குல் மா மதி ⋆
வாங்கவே கொலோ ⋆
பொங்கு மா கடல் ⋆
புலம்புகின்றதே ‖ **11.1.5** ‖

சென்று வார் ⋆
சிலை வளைத்து ⋆
இலங்கையை வென்ற வில்லியார் ⋆
வீரமே கொலோ ⋆
முன்றில் பெண்ணை மேல் ⋆
முளரிக் கூட்டகத்து ⋆

அன்றிலின் குரல் ⋆
அடரும் என்னையே ॥ **11.1.6** ॥

பூவை வண்ணனார் ⋆
புள்ளின் மேல் வர ⋆
மேவி நின்று நான் ⋆
கண்ட தண்டமோ ⋆
வீவில் ஐங்கணை ⋆
வில்லி அம்பு கோத்து ⋆
ஆவியே ⋆
இலக்காக எய்வதே ॥ **11.1.7** ॥

மால் இனந் துழாய் ⋆
வரும் என் நெஞ்சகம் ⋆
மாலின் அந்துழாய் ⋆
வந்தென்னுள் புக ⋆
கோல வாடையும் ⋆
கொண்டு வந்ததோர் ⋆
ஆலி வந்ததால் ⋆
அரிது காவலே ॥ **11.1.8** ॥

கெண்டை ஒண் கணும் ⋆
துயிலும் ⋆
என் நிறம் ⋆
பண்டு பண்டு போல் ஒக்கும் ⋆
மிக்க சீர் தொண்டர் இட்ட ⋆
பூந் துளவின் வாசமே ⋆

வண்டு கொண்டு வந்து ⋆
ஊதுமாகிலே ॥ **11.1.9** ॥

‡ அன்று பாரதத்து ⋆
ஐவர் தூதனாய் ⋆
சென்ற மாயனைச் ⋆
செங்கண் மாலினை ⋆
மன்றில் ஆர் புகழ் ⋆
மங்கை வாள் கலிகன்றி ⋆
சொல் வல்லார்க்கு ⋆
அல்லல் இல்லையே ॥ **11.1.10** ॥

அடிவரவு — குன்றம் காரும் சங்கு அங்கோராய் அங்கோராளரி சென்று பூவை மால் கெண்டை அன்று குன்றமெடுத்து

குன்றமொன்றெடுத்து முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்